Registered as a Newspaper

நல் வாழ்த்துக்கள்!
1986 பிறந்துவிட்டது!
எல்லாம் உங்களுக்கே!
நேயர்களே!
எமது வாழ்த்துக்கள்
என்றும் எமது
வியாபாரிகளுக்கே!
ஜோ. எகட்டன்
செனித் மார்க்கட்டிங்
அன்ட் அட்வர்டைசிங்
சிஸ்டம்ஸ்
யாழ்நகர்.

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ-1/=

நல் வாழ்த்துக்கள்!
1986 பிறந்துவிட்டது!
எல்லாம் உங்களுக்கே!
நேயர்களே!
எமது வாழ்த்துக்கள்
என்றும் எமது
வியாபாரிகளுக்கே!
ஜோ. எகட்டன்
செனித் மார்க்கட்டிங்
அன்ட் அட்வர்டைசிங்
சிஸ்டம்ஸ்
யாழ்நகர்.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஞூ மார்கழி மீ 18 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஆகிர் பிறை 20 (02-01-1986) UTHAYAN —A LIVELY TAMIL DAILY கதிர்:- 37

★ இனப் பிரச்சினைத் தீர்வில் மற்றொரு திருப்பம்

சிறிமாவோ தலைமையில் ராஜீவிடம் தூதுக்குழு

எதிர்க்கட்சித் தலைவியானதும் புதுடில்லிக்கு விரைவார்

— கொழும்பிலிருந்து சிறப்புச் செய்தியாளர் —

கொழும்பு, ஜன. 2

இனப்பிரச்சினைத் தீர்வில் மற்றொரு புதிய திருப்பம்!

சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா எதிர்க்கட்சித் தலைவியானதும் அவரது தலைமையில் தூதுக்குழு ஒன்று விரைவில் பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்திக்கும்.

பிரஸ்தாப தூதுக்குழு இந்தியா செல்வதற்கு ஏற்பாடுகள் இடமபெறுவதாக நம்பகரமாகத் தெரிகின்றது.

இலங்கை இனப்பிரச்சினை குறித்து திரு. ராஜீவ் காந்தியைச் சந்திக்க வாய்ப்பு அளிப்பதற்காகவே திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்குக் குடியுரிமை வழங்கப்பட்டதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு குடியுரிமை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை அரசியலில் பின்வரும் சம்பவங்கள் இனிச் சங்கிலித் தொடராக நிகழலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

* அத்தனகல எம்.பி.யான திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி ராஜினாமாச் செய்து, திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நாடாளுமன்றம் செல்ல இடமளிக்கப்படலாம்

* திரு. அனுரா பண்டாரநாயக்கா, திருமதி சிறிமாவோ எதிர்க்கட்சித் தலைவியாக வர வழி விடலாம்.

* இனப்பிரச்சினை குறித்துப் பேச வருமாறு இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தி திருமதி பண்டாரநாயக்காவுக்கு அழைப்பு விடுக்கலாம்.

* திருமதி பண்டாரநாயக்கா தலைமையில் ஒரு குழு இந்தியா சென்று இந்தியப் பிரதமருடன் பேசலாம்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதில் சுதந்திரக்கட்சி முட்டுக்கட்டையாக இருக்கின்றது. தமிழர் விடுதலைக் கூட்

(4-ம் பக்கம் பார்க்க)

முச்சந்திமுரளி

சோழியன் குடுமி சும்மா ஆடினுலும் ஆடும்; ஆனு எங்கடை அதி உத்தமர் சும்மா செய்திருக்கமாட்டார். ஏதோ ஒரு பக்கத்தாலை நிர்ப்பந்தம்வந்திருக்கும் அது மட்டும் எனக்கு நிச்சயமெண்டா நிச்சயம்!

சுபநேரம்

02 - 01 - 1986

வியாழக்கிழமை

சுபநேரம்:
8-00 முதல் 9-30வரை
ராகுகாலம்:
2-00 முதல் 3-30 வரை
இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்
இயற்பகையார் குருபூஜை

மின்சார டிரான்ஸ்போமர் சேதம்

திருகோணமலை, ஜன 2

மூதூர்ப் பிரதேசத்தில் இரண்டு மின்சார டிரான்ஸ்போமர்கள் இனந்தெரியாதோரால் சேதமாக்கப்பட்டன.

இதன் காரணமாக மூதூர்ப் பகுதி கடந்த 2 தினங்களாக இருளில் மூழ்கியுள்ளது.

புதிய ரயில்கட்டண விவரம்

யாழ்ப்பாணம், ஜன 2

ஜனவரி 1 ஆம் திகதியில இருந்து யாழ் - கொழும்பு இன்டர்சிட்டி, யாழ்தேவி ரயில் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

புதிய கட்டண விவரம் வருமாறு;

* இன்டர்சிட்டி - 150 ரூபா,
* யாழ்தேவி -
2 ஆம் வகுப்பு — 161 ரூபா 30 சதம்
3 ஆம் வகுப்பு — 59 ரூபா 30 சதம்

சர்வதேச விசாரணை கமிஷன் நியமியுங்கள்

கொலைகளை நிரூபிக்கிறேம் என்கிறது புரொடெக்

சென்னை, ஜன. 1

இலங்கையில் தமிழர்கள் பாதுகாப்புப் படையினரால கொல்லப்படுவது குறித்து விசாரணை செய்ய சர்வதேச விசாரணைக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும்.

விசாரணைக் குழு நியமிக்கப்பட்டால், தமிழ் பொதுமக்கள் கொல்லப்படுவது குறித்து இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி வெளியிட்ட கருத்துக்களை நிரூபிக்கும் வகையில் குழு முன் சாட்சியமளிக்க நாங்கள் தயார்.

இப்படி அறிவித்திருக்கிறது ஈழத்தமிழர்களைப் படுகொலையில் இருந்து காப்பதற்கான அமைப்பு (புரொடெக்).

இது தொடர்பாக அமைப்பின் இணைப்பாளர்; திரு எஸ். சி. சந்திரஹாசன் சென்னையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படுவது குறித்து தினமும் செய்திகள் வருகின்றன. இது பற்றி இந்தியப் பிரதமர் ராஜீவ் கவலை தெரிவித்திருந்தார்.

ராஜீவின் கருத்துக்கு இலங்கை தேசிய பாதுகாப்பு அமைச்சர் மறுப்புத் தெரிவித்துப் பேசியிருந்தார்.

அமைச்சர் லலித்தின் பேச்சுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே திரு சந்திரஹாசன் அறிக்கை வெளியிட்டிருக்கிறுர்.

சர்வதேச விசாரணைக் குழு ஒன்றை நியமிக்கும்படி ஐக்கிய நாடுகள் சபையை இலங்கை கேட்டுக் கொள்ள வேண்டும் எனவும் அவர் தமது அறிக்கையில் வலியுறுத்தி உள்ளார்.

'ஆமி வாருன் என்று' வீதியில் நின்றேர் கத்தினர்

ஓடத் தொடங்க சூடு விழுந்தது!

வீதியில் நின்றவர்கள் 'ஆமி வாருன்' 'ஆமி வாருன்' என்று கத்தினுர்கள். நான் ஓடத் தொடங்கியபோது சுடத் தொடங்கினுர்கள்.

வட்டக்கச்சி சிவிச் சென்றர் என்ற இடத்தில் சிருடையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்கான ஆறுமுகம் வசீகரன் (வயது 23) என்ற இளைஞன் உதயன் செய்தியாளரிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவர் தற்போது யாழ். பெரியாஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுவருகிறுர்.

தனக்கு நேர்ந்த சம்பவம்பற்றி இவர் மேலும் தெரிவித்ததாவது;

30ஆம் திகதி பகல் 2-30 மணியளவில்எமது வயலில் இருந்து மருந்து அடிக்கும் ஸ்பிறேயரை

(4-ஆம் பக்கம் பார்க்க)

மற்றொரு செய்தி
4-ம் பக்கத்தில்

அம்மையாரின் முதல் கூட்டம் கம்பஹாவில்

கொழும்பு, ஜன. 2

குடியுரிமையை மீண்டும் பெற்ற பின்னர் முதல் தடவையாக சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோபண்டாரநாயக்கா கம்பஹாவில் நடைபெற உள்ள கட்சிப் பொதுக்கூட்டத்தில் பேசுவார்.

பொதுத்தேர் தலை நடத்துமாறு கோரி 1986 இல் பொதுக்கூட்டங்களை நடத்த சுதந்திரக் கட்சி முடிவு செய்துள்ளது.

அதன் பிரகாரம் முதலாவது கூட்டம், ஜனவரி 4 ஆம் திகதி கம்பஹாவில் நடைபெறும்.

இலங்கை பெண்ணிடம் போதைவஸ்து

கொழும்பு, ஜன.2

ஜப்பான் விமான நிலையத்தில் வைத்து இலங்கைப் பெண் ஒருவர், 4 கிலோ போதை வஸ்துவுடன் அகப்பட்டார்.

நாரிடா விமான நிலையத்தில் இச்சம்பவம் இடம் பெற்றது.

இப்பெண் பாகிஸ்தானில் இருந்து ஜப்பான் சென்றுர் என்று விசாரணைகளில் இருந்து தெரிய வருகின்றது.

★ மன்னிப்புக் கோராமலே வந்த குடியுரிமை

இலங்கை அரசியலில் பெரும் மாற்றத்தைக் கொண்டு வரும்

கொழும்பு, ஜன. 2

யார், யாரிடம் மன்னிப்புக் கேட்டது?

மன்னிப்புக் கேட்காமலே எமக்குக் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது.

சர்வதேச நிர்ப்பந்தம் தாங்க முடியாமல் எனக்குக் குடியுரிமையைத் தந்து விட்டார்கள்.

இப்படி சுதந்திரக்கட்சித்தலைவி திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா சொன்னுர்.

பறிக்கப்பட்ட குடியுரிமை மீண்டும் கிடைத்ததைத் தொடர்ந்து

சிறிமாவோ சொல்கிறுர்

திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா இக்கருத்தை வெளியிட்டார்.

திருமதி பண்டாரநாயக்கா மேலும் சொன்னதாவது;

என்ன நோக்கத்தில் குடியுரிமையைத் தந்தார்களோ தெரியவில்லை. நல்லெண்ணம் காரணமாகத் தந்திருந்தார்கள் என்றுல் 1986 ஆம் ஆண்டு சிறந்த ஆண்டாக அமையும்.

நான் குடியுரிமையை மீண்டும் பெற்றது, இலங்கை அரசியலில் பெருத்த மாற்றத்தை ஏற்படுத்தப் போகின்றது.

காமதமாகவேனும் நீதி நிலைநிறுத்தப்பட்டுவிட்டது.

"நான் மன்னிப்புக் கேட்கின்றேன். மீண்டும் குடியுரிமையைத் தாருங்கள்'' என்று நான் எவரையும் கேட்டதும் இல்லை; கெஞ்சியதும் இல்லை.

சர்வதேச ரீதியிலான நிர்ப்பந்தம் காரணமாகவே இலங்கை அரசு எனக்கு மீண்டும் குடியுரிமையை வழங்கியது.

அரசாங்கம் தான் எனது குடியுரிமையைப் பறித்தது. மக்கள் அல்ல. நான் திருந்தவில்லை.

(4-ம் பக்கம் பார்க்க)

இனப்பிரச்சினை:

இந்தியா இடைவிடாது நெருங்கிய தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறது

புதுடில்லி, ஜன. 1,

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக இந்தியா இலங்கையுடன் இடைவிடாது நெருங்கிய தொடர்பை வைத்துக்கொண்டிருக்கிறது.

இந்திய வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் இதனை நேற்றுத் தெரிவித்தார்.

இதன் ஒரு பகுதியாகவே இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவர் திரு. டிகஷித் ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவையும்பாதுகாப்பு அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலியையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினுர் என்றும் அந்த அதிகாரி சொன்னுர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யோசனைகளை இலங்கை அரசு ஆலோசிப்பதாகக் கூறிய அந்த அதிகாரி இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் இந்தியாவின் ஆர்வத்தை மீண்டும்

[4-ம் பக்கம் பார்க்க)

படை வீரர்கள் தவறிழைத்தது உண்டு

கூட்டுத் தளபதி ஒப்புக்கொள்கிறுர்

கொழும்பு, ஜன. 2

பாதுகாப்புப் படையினர் சில சந்தர்ப்பங்களில் தவறிழைத்திருக்கிறுர்கள் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

இப்படித் தெரிவித்தவர் முப்படைகளின் கூட்டுத் தளபதி மேஜர் ஜெனரல் சிறில் ரணதுங்க.

புத்தாண்டை ஒட்டி அவர் விடுத்த செய்தியிலேயே இப்படித் தெரிவித்திருக்கிறுர்.

பாதுகாப்புப் படையினர் மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் தமது கடமையைச் செய்கிறுர்கள். அத்தகைய சில சந்தர்ப்பங்களில் அவர்களினுல் தவறு இழைக்கப்பட்டிருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன். அனுல் நாம் அதைப் பின்னர் திருத்திக் கொண்டோம்.

படையினர் சகல மக்களையும் சமமாகவே கருதி அவர்களின் நலன்களைப் பேணுவார்கள்.

மக்களின் மத, இன வேறுபாடுகளைப் பார்த்து அவர்களைப் பிரித்து நடத்த மாட்டார்கள் என நான் உறுதி கூறுகிறேன்.

இப்படித் தமது புத்தாண்டுச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

குடியுரிமைகள் பறிப்பும்-மன்னிப்பும்:

சில பின்னணித் தகவல்கள்

கொழும்பு, ஜன. 2

இறந்து போன முன்னுள் அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா உட்பட நான்கு பேர்களுக்கு பறிக்கப்பட்ட குடியுரிமை மீண்டும் வழங்கப்பட்டது.

அவர்கள் விபரம் வருமாறு:

1 திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா.

2. திரு. நிஹால் ஜெயவிக்ரம, நீதி அமைச்சின் முன்னுள் செயலாளர்.

3. டாக்டர் ஏ. எம். ஜலால்டீன், பொத்துவில் முன்னுள் எம் பி.

4. காலஞ் சென்ற திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா.

திருமதி பண்டாரநாயக்கா. திரு. நிஹால் ஜெயவிக்கிரம, காலஞ் சென்ற திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா ஆகியோரின் குடியுரிமையைப் பறிக்கும் சட்டம் நாடாளுமன்றத்தில் 16.10.1980 இல் நிறைவேற்றப்பட்டது.

அரசமைப்புச் சட்டத்தின் 81 ஆவது ஷரத்தின் கீழ் இச்சட்டம் நிறைவேற்றப்பட்டது.

இவர்கள் தமது ஆட்சிக்காலத்தில் அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடு

(4-ஆம் பக்கம் பார்க்க)

3-ம் பக்கத்தில்
★ திம்புவில் பண்டாரி
★ போராளிகள் பற்றி தொண்டா
★ வித்தாரம்

கடத்தப்பட்ட மினிவான் ஒப்படைக்கப்படாவிடில் நாளை சேவை நிறுத்தமாம்

பருத்தித்துறைப் பகுதியில்

கரவெட்டி, ஜன. 2

மினி வான் ஒன்று கடத்தப்பட்டதை ஆட்சேபித்து நாளை வெள்ளிக்கிழமை பருத்தித்துறைப் பகுதியில் தனியார் பஸ்கள் எதுவும் சேவையில் ஈடுபடமாட்டா.

பருத்தித்துறை மினிவான சங்கம் இதனை அறிவித்துள்ளது.

கடத்தப்பட்ட மினிவான் வியாழக்கிழமைக்கு முன் திருப்பி ஒப்படைக்கப்பட வேண்டும் என்று மினி வான் சங்கம் காலக்கெடு விதித்துள்ளது.

வீடு ஒன்றில் விடப்பட்டிருந்த சமயம் கடந்த திங்கட்கிழமை இந்த மினி வான் கடத்தப்பட்டது.

இனம் தெரியாத இளைஞர்கள் சிலர் வீட்டுக் கேற்றை உடைத்து துப்பாக்கி முனையில் வானைக் கடத்திச் சென்றிருந்தவர்.

JCC உங்களை அன்புடன் அழைக்கின்றது!

மாணவர்களே!
உங்களுக்குத் தேவையான பாடசாலை அப்பியாசப் புத்தகங்கள், உபகரணங்கள்
மலிவு விலையில்
விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன
40 பக்கக் கொப்பி ஒன்று 1 ரூ. 30 ச.
40 பக்கக் கொப்பி 1 டசின் 15 ரூ.

கமக்காரர்களே!
உங்களுக்குத் தேவையான உரம், களைகொல்லி, கிருமிநாசினி வகைகள் காய்கறி விதைகள் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.

உர விலைகள்:

அமோனியா	50 கிலோ	210 ரூபா
யூறியா	50 கிலோ	155 ரூபா
V 1 கலவை	25 கிலோ	80 ரூபா
மிளகாய் உரம்	25 கிலோ	85 ரூபா
T.D.M.	25 கிலோ	80 ரூபா

கிருமிநாசினி - களை கொல்லி விலைகள்:
தமரோன், அலரோன், செலிக்கிரோன், லனட், அம்புஸ், மொனிற்றர், லஸ்சோ, கோல்ட், அன்றகோல், புறபகோல், சல்பர்.
விலை: 25 ரூபா தொடக்கம் 200 ரூபா வரை.

கட்டட அமைப்பாளர்களே!
உங்களுக்குத் தேவையான இரும்பு, சிமெந்து, தீந்தை வகைகள், மின்சார உபகரணங்கள் விற்பனையாகின்றன.
சிமெந்து 99 ரூபா 50 சதம்.

JCC
உரும்பராய் சந்தி, உரும்பராய்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

மைசூரில் தமிழ் படம் திரையிடுவதற்கு தடை

தினசரி சினிமா

மைசூரில் தமிழ்ப் படங்கள் வெளியிடக் கூடாது என்று கன்னட தீவிரவாதிகள் அறிவித்திருக்கிறார்கள்.

இந்த அறிவிப்புக்கு அஞ்சி தியேட்டர்காரர்களும் தமிழ்ப் படங்களை வெளியிடுவது இல்லை என்ற முடிவுக்கு வந்துள்ளார்கள்.

கன்னட தீவிரவாதிகளின் அறிவிப்பு இது தான்.

''திரையிடுவதற்கு கன்னடப் படம் இல்லை என்றால் இந்திப் படம் திரையிடலாம். இந்திப் படம் கிடைக்கவில்லை என்றால் ஆங்கிலப் படத்தை வெளியிடலாம்.

ஆனால் அண்டை மாநிலத்தைச் சேர்ந்த தமிழ்ப் படங்கள் எக்காரணம் கொண்டும் வெளியிடப்படக் கூடாது.''

கன்னட தீவிரவாதிகளான ராஜ்குமாரின் ரசிகர்களுக்கு தமிழ்ப் படங்களிலும் — தமிழின் மீதும் இத்தனை கசப்புணர்வுக்குக் காரணம் யாதோ?

மைசூரில் இன்னொரு சம்பவமும் நிகழ்ந்துள்ளது.

மைசூருக்கு அருகே நடந்த ஒரு படப்பிடிப்புக்கு நடிகை நளினியுடன் அவரது தாயாரும் சென்றிருக்கிறார்.

இடையில் நளினியின் தாயார் மைசூர் நகருக்குச் சென்று சாமான்கள் வாங்கிவர, ஆட்டோவில் சென்றிருக்கிறார்.

இடை வழியில் இவரைத் தமிழ்ப் பெண் என்று அடையாளம் கண்டு கொண்ட ஆட்டோ டிரைவர், பலாத்காரமாக இறக்கி விட்டுப் போய் விட்டானாம்.

இவன் வழமையாக தமிழர்களைத் தனது ஆட்டோவில் ஏற்றிச் செல்வது இல்லையாம்.

இப்படி நடக்கிறது மைசூரில்!

ஆனால் சென்னையில் . . . .

கன்னட நடிகரான அர்ஜுனுக்கு தமிழ்ப் படங்களில் அடுத்தடுத்து நல்ல வாய்ப்புகள்.

அது மட்டுமா?

தமிழ்ப்படவுலகே கன்னட நடிக, நடிகைகளின் ஆட்சியில் அல்லவா இருக்கின்றது.

பாகிஸ்தானில் மீண்டும் அரசியல் சுதந்திரம்

பிரதமர் ஜுனெஜோ வாக்குறுதி

இஸ்லாமாபாத், ஜன. 1

பாகிஸ்தானில் அரசியல் சுதந்திரத்தை மீண்டும் பெறுவது நிச்சயம் என பாகிஸ்தான் பிரதமர் மொஹமத்கான் ஜுனெஜோ மக்களுக்கு உறுதியளித்துள்ளார்.

வானொலியில் ஆற்றிய உரையொன்றிலேயே மேற்கண்ட வாக்குறுதி அவரால் வழங்கப்பட்டது.

கிளர்ச்சியாளர்களிடம் எதிர் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாமெனவும் தமது உரையின் போது விண்ணப்பித்துக் கொண்டார் அவர்.

படிப்படியாக ஜனநாயக முறைகள் வளர்ச்சியடையும் என உறுதி கூறிய பிரதமர், இஸ்லாமிய கோட்பாடுகளே தமது அரசின் வழிகாட்டற் கொள்கையாக இருக்குமென தெரிவித்துள்ளார்.

பொது மக்களின் நல்வாழ்வுக்கான ஐந்து அம்சத் திட்டமொன்றையும் விரைவில் அறிமுகம் செய்யப் போவதாகவும் அவர் தமது உரையில் மேலும் தெரிவித்துக் கொண்டார்.

ராணுவச் சட்டம் நீக்கப்பட்டதையடுத்து பாக் அமைச்சரவை தனது பதவி விலகல் பத்திரத்தை ஒப்படைத்து விட்டது.

பாகிஸ்தானின் புதிய அமைச்சரவை நியமனங்கள் அறிவிக்கப்படும் வரை முன்னைய அமைச்சர்கள் தமது கடமைகளைத் தொடருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

முக்கிய அமைச்சுக்களான வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, நிதியமைச்சு ஆகிய இரண்டிலும் நியமன மாற்றங்கள் நடைபெற மாட்டாதென நம்பப்படுகிறது.

திருமதி வினி மண்டேலாவும் தெரிவானார்

லண்டன், ஜன. 1

பிரிட்டனின் வானொலி கேட்போர் 1985 ஆம் ஆண்டின் சிறப்புப் பெண்களைத் தெரிவு செய்துள்ளனர்.

இளவரசி ஆன் முதலாவதாகவும் இரண்டாவது பிரதமர் திருமதி மார்கிறட் தட்சரும் மூன்றாவதாக ஆபிரிக்க விடுதலைத் தலைவி திருமதி வினி மண்டேலாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ம.பொ.சி.செய்தி

சென்னை, ஜன 1

ஈழத்தமிழர்களுக்கும் தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கும் இன உணர்வு, இன உரிமை, தன்மானம், இனமானம் தரும் எழுச்சிமிக்க ஆண்டாக புத்தாண்டு அமைய வேண்டும்.

இப்படி திராவிடர் கழகத் தலைவர் திரு. க. வீரமணி தனது புத்தாண்டுச் செய்தியில் கூறியுள்ளார்.

புதிய ஆண்டிலாவது இலங்கை இனப் பிரச்சினைக்கு நல்லபடியான தீர்வு ஏற்படவேண்டும். இப்படி தமிழக மேல் சபைத் தலைவர் திரு ம. பொ. சிவஞானகிராமணியார் தனது புத்தாண்டுச் செய்தியில் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கைத் தமிழர் உரிமை பெற்று வாழ புத்தாண்டில் வழி பிறக்க வேண்டும்- இப்படி தமிழ்நாடு காந்தி-காமராஜ் கட்சித்தலைவர் திரு. குமரி அனந்தன் தனது புதுவருடச் செய்தியில் குறிப்பிட்டு உள்ளார்.

லிபிய நடவடிக்கைகளை முறியடிக்க வேண்டும்

இஸ்ரவேல் விருப்பம்

டெல்அவிவ், ஜன 1

லிபியாவின் நடவடிக்கைகளைக் கிழக்காசியாவில் கட்டுப்படுத்தவும் முறியடிக்கவும் சமாதானம் விரும்பும் நாடுகள் இணைய வேண்டுமென இஸ்ரவேல் கேட்டுக் கொண்டுள்ளது.

இதற்கான ஒரு மாநாட்டைக் கூட்ட வேண்டுமென இஸ்ரவேல் அமெரிக்காவுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

தீவிரவாத நடவடிக்கைகளுக்கு லிபியா பல வழிகளிலும் ஆதரவளித்து வருவதாகவும் இஸ்ரவேல் குற்றம் சாட்டியுள்ளது

அமெரிக்காவும் லிபியாவுக்கெதிரான பிரசாரங்களை அண்மைக் காலங்களில் முடுக்கி விட்டிருப்பது தெரிந்ததே.

ரோம், வியன்னா தாக்குதல்

லிபியா பின்னணி என இஸ்ரவேல் ஆத்திரம்

டெல் அவிவ் ஜன. 1

லிபியாவைப் பழி வாங்கப் போவதாக இஸ்ரவேல் தெரிவித்துள்ளது.

ரோம், வியன்னா விமானத் தளங்களில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் நடவடிக்கைகளுக்கு லிபியா பின்னணியில் இருந்ததாகவும், அபுநிதால் கெரில்லா குழுத் தலைமை லிபியா ஆதரவுடன் இயங்குவதாகவும் இஸ்ரவேல் மேலும் தெரிவித்துள்ளது.

லிபிய அரசு தாக்குதல்களுக்கும் தனக்கும் சம்பந்தமில்லையென அமெரிக்காவினதும் இஸ்ரவேலினதும் குற்றச்சாட்டுக்கு மறுப்புத் தெரிவித்துள்ளது.

வெளி உலகில்

பாகிஸ்தானில்

சந்தேகத்தைக் கிளப்பியுள்ள ஸியாவின் இராணுவ தலைமை

எதிர்ப்பாளரும் விமர்சகரும் பலத்த கண்டனம்

இஸ்லாமாபாத், ஜன. 1

பாகிஸ்தானில் இராணுவச் சட்டம் நீக்கப்பட்டாலும் அதிபர் ஸியா உல் ஹக் தனது இராணுவ தலைமைப் பதவியிலிருந்து இன்னும் நீங்கவில்லை. இதனால் பல சந்தேகங்கள் அங்கு எழுந்துள்ளன.

இராணுவத் தலைவர், பதவியில் ஸியா இன்னும் ஒட்டிக் கொண்டிருப்பது எதிர்ப்பாளர்கள் மத்தியிலும் விமர்சகர்கள் மத்தியிலும் பல கேள்விக் குறிகளை எழுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ தலைவர் பதவியிலிருந்து விரைவில் விடுபட்டுக் கொள்வீர்களா என கேட்கப்பட்ட போது 'காலம் பதில் சொல்லும்' என பதிலளித்துள்ளார் ஸியா.

அதிகாரங்கள் தனது கைக்கு வந்து சேரும் வரை இவர் அந்தப் பதவியில் தொடர்ந்து இருந்து கொண்டிருப்பார் என விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

பத்தாண்டுகளுக்கு ஸியா இந்தப் பதவியில் இன்னும் இருக்கலாம் என மேலும் தெரிவிக்கப்பட்டது.

ஸியா 1977 ஆம் ஆண்டு அதிகாரத்துக்கு வருமுன்பே இந்தப் பதவியிலிருந்து வருகிறார்.

இராணுவச் சட்டத்தை நீக்கிய பின்பும் தொடர்ந்து இந்தப் பதவியை அவர் வகிப்பது சந்தேகங்களுக்கு மேலும் வழிகோலியுள்ளது.

பாகிஸ்தானின் முன்னாள் பிரதம நீதியரசர் கருத்துக் கூறியபொழுது இராணுவ அதிபராகவும் ஜனாதிபதியாகவும் ஸியா இரட்டைப் பதவியிலிருப்பது ஜனநாயக மரபுகளுக்கெதிரான திசைப் போக்குகள் உருவாகவே மேலும் வகை செய்யும் எனத்தெரிவித்துள்ளார்.

ஹபரணையில் கைதான ஆசிரியர்

யாழ்ப்பாணம், ஜன. 2

ஹபரணையில் வைத்து ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்ட மார்க்கண்டு சிவபாலசுந்தரம் என்ற ஆசிரியர் குறித்து பூநகரி பிரஜைகள் குழு மேலிடத்துடன் தொடர்பு கொண்டுள்ளது.

இவர் பூநகரி முழங்காவில் அரசினர் பாடசாலையில் பணியாற்றி வந்தார்.

பஸ்ஸில் மூதூர் சென்ற சமயம் இவர் கைதானார்.

திருமலை பிரஜைகள் குழுவும் இவர் பற்றி ஆயுதப்படையினருடன் தொடர்பு கொண்டுள்ளது.

பட்டதாரி ஆசிரியர் சம்பள வேறுபாடு நிலவும் ஒரே நாடு இது

வயாவிளான் கருத்தரங்கில் உரை

யாழ்ப்பாணம், ஜன. 2

''பட்டதாரி ஆசிரியர்களிடையே சம்பள வேறுபாடு நிலவும் ஒரே நாடு இலங்கை என்றே நம்புகிறேன். இந்நிலை மாற ஆசிரியர் தொழிற் சங்கங்கள் சிறப்பாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் போராட வேண்டும்.''

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மொழியியற் றுறைப் பேராசிரியர் அ. சண்முகதாஸ் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கக் கருத்தரங்கில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

'சமுதாயத்தில்ஆசிரியர் தொழிற் சங்கங்களின் தாக்கம்' என்னும் பொருளில் சர்வதேச சுதந்திர ஆசிரியர் சங்க சம்மேளனம், பிரெட்றிச் ஈபேர்ட் மன்றம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆகியன இணைந்து ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகளை நடத்தின.

இக்கருத்தரங்கில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் பொதுச் செயலாளர் க. இ. குமாரசாமி தமது சிறப்புரையில் சர்வதேச ஆசிரியர் அமைப்புகளுடன் இணைந்து செயற்படும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் எமது பிரச்சினைகளையும் சர்வதேசப்படுத்த உழைக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

தொடக்க விழாவில் தலைமையுரை நிகழ்த்திய இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம் தனது உரையில், தமிழ் மக்களின் கல்விப் பிரச்சினையை சர்வதேசப்படுத்தி அதன் சாதக பாதகங்களை உலகளவில் ஆய்வு நடத்திய ஒரே அமைப்பு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் என்று குறிப்பிட்டார்.

ஆண், பெண் ஆசிரியர்களுக்கான இரண்டு கருத்தரங்குகளும் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றன.

ஏழைகளைப் பாதுகாப்பதே பாவனையாளர் சங்கங்களின் சிறப்பான நோக்கம்

அமைப்புக கூட்டத்தில் உதவி அரசாங்க அதிபர் உரை

நாகர் கோவில், ஜன 2

''நகரப் புறங்களில் அமைந்திருந்த பாவனையாளர் சங்கம் இன்று கிராமப் புறங்களுக்கு நகர்ந்துள்ளது. கிராமப்புற ஏழை மக்களைப் பொருளாதார ரீதியாகச் சுரண்டுவதைத் தடுப்பதே இன்று பாவனையாளர் சங்கத்தின் பிரதான நோக்கமாகவுள்ளது''

மேற்கண்டவாறு வடமராட்சி தெற்கு மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான பாவனையாளர் சங்கப் பிரதேச சபைக் கூட்டம் அண்மையில் அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட போது கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு.ஆர். ஐயாத்துரை கூறினார்.

அடுத்து கரவெட்டிப் பகுதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி திரு எஸ். சிவேஸ்வரத்தம்பி பேசியதாவது,

''உங்கள் கிராமத்திலோ நகரத்திலோ நிறை குறைவு, தரமற்ற பொருள் விற்பனை, நிபந்தனை விற்பனை, கலப்படப் பொருள் விற்பனை, விலை கூட்டிய விற்பனை, பொருள்களைப் பதுக்கி வைத்தல்,இருத்தல் படி பாவித்தல்,பொருள்களை வைத்துக் கொண்டு விற்பனை செய்ய மறுத்தல், விற்பனை செய்த பொருள்களுக்குச் சிட்டை வழங்க மறுத்தல் ஆகிய குற்றச் செயல்களில் ஈடுபடும் வர்த்தகர்களைப் பாவனையாளர் சங்கங்கள் கண்டு பிடித்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்,

வடமராட்சி தெற்கு மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் பாவனையாளர் சங்க பிரதேச சபைத் தலைவர் திரு. ஆர். ஐயாத்துரை. உப தலைவர் திரு. பி. தாமு. செயலாளர் திரு எஸ் செல்வராஜா துணைச் செயலாளர் திரு. கே. வீனுகோபால், பொருளாளர் திரு ஏ கதிரவேலு. மேலும்11பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

யாழ். மாவட்டத்துக்கு ரூ. 90 லட்சம் ஒதுக்கீடு

நகர வீடமைப்பு உப திட்டத்தின்கீழ்

யாழ்ப்பாணம், ஜன 2

நகர வீடமைப்புத் உப திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 90 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாநகர சபைக்கும் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை சாவகச்சேரி நகர சபைகளுக்கும் நிதி வழங்கப்படும்.

யாழ்ப்பாண மாநகர சபைக்கு 60 லட்சம் ரூபாவும் ஏனைய மூன்று நகரசபைகளுக்கு தலா பத்து லட்சம் ரூபாவும் வழங்கப்படும்.

இவ்வீடமைப்பு திட்டம் அவ்வப்பகுதி உள்ளூராட்சி மன்றங்கள் மூலம் அமுலாக்கப்படும் என்று தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மாவட்ட முகாமையாளர் திரு. டி. பி. முருகையா உதயனுக்கு விளக்கம் அளித்தார்.

யாழ்மாவட்டத்தில் வீடமைப்புக் கடன்

யாழ்ப்பாணம், ஜன.2

நீண்ட நாட்களாக யாழ்ப்பாண மாவட்டத்தில் இடை நிறுத்தப்பட்டு இருந்த வீடமைப்புக் கடன்கள் புத்தாண்டு முதல் வழங்கப்பட உள்ளன.

யாழ்ப்பாணம் உட்பட எட்டு மாவட்டங்களில் புதிய நடைமுறையின் கீழ் இக்கடன்கள் வழங்கப்படும். பரீட்சார்த்த ரீதியாகவே இம்மாவட்டங்களில் புதிய நடைமுறை கையாளப்படும்,

பின்னர் இத்திட்டம் ஏனைய மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் வீடு கட்டுவோருக்குத் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்கள் மூலமே கடன் வழங்கும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இத்திட்டத்தை அமுல் செய்வது தொடர்பாக அதிகாரிகள் யாழ் செயலகத்தில் நேற்றுக் காலை கூடி ஆராய்ந்தனர். இதுபற்றிய விரிவான அறிக்கையை அதிகாரிகள் அடுத்த கூட்டத்தில் தயாரிக்க உள்ளனர்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, கூட்டுறவுத் திணைக்களம் ஆகியவை ஒருங்கிணைத்து யாழ் செய[illegible]ர்பார்வையின் கீழ் இதனை அமுலாக்க உள்ளன.

மட்டக்களப்பில் கொள்ளை

மட்டக்களப்பு, ஜன. 2

மட்டக்களப்பு தொலை தொடர்பு திணைக்களம் கடந்த திங்கள் இரவு கொள்ளையடிக்கப்பட்டது.

ஆயுதபாணிகளாகதிணைக்களத்தினுள் புகுந்த பத்துப் பேர் பற்றறிகள்,வயர்கள், தொலைத் தொடர்பு சாதனங்கள் உட்பட பெருந்தொகையான பொருள்களைக் கொள்ளையடித்துச் சென்றார்கள்.

வர்த்தக வங்கிகளுக்கான

கடன் வட்டியை மத்திய வங்கி குறைத்தது

யாழ்ப்பாணம், ஜன.2

வர்த்தக வங்கிகளுக்கு வழங்கும் கடன்களுக்கு அறவிடப்படும் வட்டி விகிதத்தை 13 சத வீதத்தில் இருந்து 11 சத வீதமாக மத்திய வங்கி குறைத்துள்ளது.

வர்த்தக வங்கிகள் அறவிடும் வட்டி விகிதத்தைக் குறைக்கவும், குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்கி பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவுமே மத்திய வங்கி இந்த நடவடிக்கையை எடுத்துள்ளன.

வங்கி வட்டி [illegible] குறைப்பினால், வர்த்தக வங்கிகள் நிரந்தர வைப்புக்குச் செலுத்தும் வட்டி விகிதத்தை உடனடியாகக் குறைக்க உள்ளது.

வழங்கும் கடன்களுக்கான வட்டி விகிதத்தை அடுத்த மூன்று மாதங்களுக்குள் குறைக்க உள்ளன.

நிரந்தர வைப்பு பணத்திற்கான வட்டி 2 சத வீதம் முதல் 3 சத வீதம் வரை குறைப்பதே, முதல் கட்ட நடவடிக்கையாக இருக்கும் என்று வர்த்தக வங்கி வட்டாரங்கள் கூறுகின்றன.

மானிப்பாய் கிறீன்ஆஸ்பத்திரி

டாக்டர்களுக்கு நன்றி

யாழ்ப்பாணம், ஜன 2

சுதுமலை விமானத்தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்தவர்களுக்கும் அகதிகளாக வந்தவர்களுக்கும் மருத்துவ சிகிச்சை அளிக்கதுக்காக மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த ஆஸ்பத்திரி டாக்டர்கள் ஊழியர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுதுமலை பிரஜைகள் குழு ஆஸ்பத்திரி நிர்வாகத்துக்கு இந்த நன்றிக் கடிதத்தை அனுப்பியுள்ளது.

இவ்விமானத் தாக்குதல் சம்பவத்தில் 10பேர் காயமடைந்தனர். 1200 பேர் வரையில் அகதிகளாயினர்.

இதனிடையில் யாழ்ப்பாணம் வரும் கண்காணிப்புக்குழுவைச் சந்தித்து இச்சம்பவம் பற்றி முறையிட ஆறுபேர் கொண்ட தூதுக்குழு ஒன்றை சுதுமலைப் பிரஜைகள் குழு, யாழ்ப்பாணம் அரச அதிபருக்குச் சிபார்சு செய்துள்ளது.

தூதுக்குழு உறுப்பினர் விவரம் வருமாறு:

1. திரு.சி.மார்க்கண்டு ஜே.பி
2. திரு.க. தம்பிராசா ஜே.பி.
3. சட்டத்தரணி அ. தெய்வேந்திரம்
4. கலாநிதி சோ.கிருஷ்ணராஜா
5. திரு. செ. விசுவலிங்கம்
6. திரு. அ. நற்குணசேகரன்

பயிற்றப்பட்ட பட்டதாரிகளுக்கு டிப்ளோமா தேவையா?

நிபந்தனையை விலக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 2

பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களும் டிப்ளோமா பயிற்சி பெற வேண்டும் என்று விதிக்கப்பட்ட நிபந்தனையை கல்வி அமைச்சு வாபஸ் பெற வேண்டும். இப்படி கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிபந்தனையினால் பாதிக்கப்பட்ட பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவத்தைச் சந்தித்து இது சம்பந்தமாக முறையிட்டனர்.

நடைமுறையில் டிப்ளோமா பயிற்சியும் ஆசிரியர் பயிற்சியும் சமமான தரத்தையுடையன

தற்போது பயிற்றப்பட்ட பட்டதாரிகளை டிப்ளோமாப் பயிற்சி பெறுமாறு பணிக்கப்பட்டிருப்பது வருந்தத்தக்கது.

இப்படி பாதிக்கப்பட்டவர்கள் திரு. மகாசிவத்திடம் முறையிட்டனர்.

இது குறித்து கல்வி அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு வருவதாக திரு. மகாசிவம் உறுதி அளித்தார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

பிரார்த்தனை ஒரு நல்ல மருந்து. இதன்மூலம் மன அமைதியும் நிம்மதியும் உனக்குக் கிடைக்கும். ஆகவே பிரார்த்தனை செய். அதனால் நன்மை உண்டு.

பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபா

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல: 15, 2வது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 24805
22073

02-01-86 த. பெ. 28

உலக மனசாட்சியும் உண்மையின் நிழலும்

இலங்கைத் தமிழரை அழிவில் இருந்து காப்பாற்ற உதவுமாறு உலகின் மனச்சாட்சிக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் குழுக் கூட்டம் நடந்த கையோடு இந்த வேண்டுகோள் வந்தது.

கஷ்டப்பட்டு, கவலைப்பட்டு, நிர்க்கதிக்கு ஆளாகும் ஒருவன் கடைசியில் ''கடவுளே! என்னைக் காப்பாற்று'' என்று தன்னை அறியாமலே அழுதுவிடுகின்றான் அவன் சொந்த வாழ்க்கையில் முழு நாஸ்திகனாக இருந்தாலும் கூட, துன்பத்தின், துயரத்தின் உச்சக்கட்டத்தில் அவனை அறியாமல் ஓர் உள்ளுணர்வு அந்த நிலைக்கு உந்துகிறது.

இலங்கைத் தமிழருக்கும் அப்படி ஒரு நிலை வந்துவிட்டது தமிழன் இந்த நாட்டின் சிறுபான்மையினன் அதற்காக அவனது அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகின்றன. அவன் சுதந்திரமாக, கௌரவமாக வாழ வாய்ப்பில்லை; வசதி இல்லை.

அந்தளவோடு நிற்கவில்லை ஆட்டைக் கடித்து,மாட்டைக் கடித்து மனிதனைக் கடித்த நாயின் கதை ஒன்று உண்டு. அதே போல தமிழனின் பொருளில் கைவைத்து, நிலத்தில் கைவைத்து தமிழர் உயிரிலேயே கை வைக்கும் கைங்கரியத்தில் பெரும்பான்மையினரின் அரசு ஈடுபட்டுவருகிறது. சுருங்கக் கூறின் இந்த நாட்டிலிருந்து தமிழினத்தை அழித்துவிட முயற்சிகள் நடந்து வருகின்றன.

இந்த விவகாரம், விவகாரத்தின் ஆழம் உலகுக்கு இன்னமும் சரிவரத் தெரியாது. அப்பாவித் தமிழர்களைச் சுட்டுக் கொன்றுவிட்டு பயங்கரவாதிகளைக் கொன்றதாக வெளிநாடுகளுக்குக் காட்டப்படுகிறது. தமிழர்களின் பிரச்சினைக்குப் பயங்கரவாத முலாம் பூசப்பட்டு வெகு தந்திரமாக இன அழிப்பு வேலை நடந்து கொண்டிருக்கிறது. அதனைச் செய்விப்பவர்களுக்கும் ஒரு மனச்சாட்சி உண்டு. இப்போது தாம் செய்வது தமது மனச்சாட்சியின்படி அவர்களுக்குச் சரியெனப்படலாம்.

கொலைகாரனுக்கும் ஒரு மனச்சாட்சி இருக்கிறது. அவன் கொலை செய்யும் போது மனச்சாட்சியைத் தனது பக்கம் மாற்றிக் கொண்டு தான் அந்தத் தொழிலைச் செய்கிறான். அதன் பின் அவனது உண்மையான மனச்சாட்சி- உள்ளார்ந்த மனச்சாட்சி அவனை உறுத்துவது உண்டு.

அது போலவே பெரும்பான்மை அரசின் மனச்சாட்சியும் எப்போதோ ஒரு வேளை உறுத்தவே செய்யும்; குற்ற உணர்வு குத்தவே செய்யும்.

ஒருவன் தனது மனச்சாட்சியை மாற்றலாம். ஆனால் மற்றவனின் மனச்சாட்சியை மாற்றுவது கடினம். உலகின் மனச்சாட்சி சரிவர இயங்க முடியாதவாறு கருமங்களை இருட்டில் நடத்தலாம், இருட்டடிப்புச் செய்யலாம் என இலங்கை நாட்டு அரசு நினைக்கக் கூடும். ஆனால் அது நிலைக்காது. என்றோ ஒரு நாள் அவர்கள் மூலமே சொந்தத்தில் புரிந்த அநியாயம் வெளிச்சத்துக்கு வரும்.

ஆனால் அதுவரை நாம் காத்திருக்க முடியாது அவ்வாறு காத்திருப்பின் எமது அருமந்த இனம் அழிந்து விடலாம்.

எனவே உலகின் மனச்சாட்சிக்கு நாம் உண்மையைக் காண்பிக்க வேண்டும். எல்லா நாடுகளுக்கும் இங்கு நடக்கும் அநியாயம் தெரிவிக்கப்பட வேண்டும்.

அதனைக் கூட்டணி மட்டும் செய்ய இயலாது ஒவ்வொரு தமிழனும் தன்னால் இயன்ற வரை செய்ய வேண்டும்.

உலக மனசாட்சிக்கு உண்மையை உரைத்திட ஓர் இயக்கம் ஆரயபிக்க வேண்டும்.

அப்போது தான் கோணல் மனச்சாட்சியின் இருட்டடிப்பு வெளிச்சத்துக்கு வரும். உண்மையின் நிழல் படரும்.

எரிந்த டிரக்கை லொறியில் கட்டி இழுத்துச் சென்றனர்.

யாழ்ப்பாணம், ஜன 2 எரிந்த நிலையில் இருந்த டொயோட்டா டிரக் ஒன்றை இனந்தெரியாத கோஷ்டி கடத்திச் சென்றது.

டிசம்பர் 29 இரவு 12-30 மணி அளவில் குருநகர் மீன்பிடிக் கூட்டுத்தாபன அலுவலகத்தில் இச்சம்பவம் இடம் பெற்றது.

கோஷ்டி தாம் வந்த எல்வ் லொறியில் எரிந்த டிரக்கைக் கட்டி இழுத்துச் சென்றது.

இது சம்பந்தமாக யாழ். பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

பண்டாரியின் ராஜதந்திரம்

வெண்கலக் கடைக்குள் யானை

போன்றது-தமிழ்ப் போராளிகள்

இலங்கைத் தமிழர் பிரச்சினை உருப்படியான தீர்வு காண முடியாத இழுபறி நிலைக்கு வந்ததற்குக் காரணம், 'வெண்கலக் கடைக்குள் யானை புகுந்த' மாதிரியான ராஜதந்திரப் போக்கை இந்தியா கடைப்பிடிப்பதே.

அந்த யானை வேறு யாரும் அல்ல. இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரிதான்.

திம்பு இரண்டாம் கட்ட மாநாட்டில்கலந்துகொண்ட தமிழ் அமைப்புக்களின் கருத்துக்கள் தான் மேற்கண்டவை.

திருகோணமலை, வவுனியா பகுதிகளில் 300க்கு அதிகமான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள் என்று பி.பி.சி. வானொலி அறிவித்தது.

திம்பு மாநாட்டின் இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் கலந்து கொண்ட தமிழர் அமைப்புக்கள் பி.பி.சி. செய்தியைக் கேட்டதும் கலங்கினர். தமிழர் பிரதிநிதிகள் வாய் விட்டே அழுதனர்.

இப்படி தமிழர் பிரதிநிதி ஒருவர் சொன்னார்.

உணர்ச்சி வசப்பட்ட நிலையில் தமிழர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் காணப்பட்டனர். உடனே வெளிநடப்புச் செய்யவும் அவர்கள் விரும்பினர்.

உடனே எல்லா விடுதலை அமைப்புக்களும் கூடின. தமிழர் படுகொலையை ஆட்சேபித்து இரண்டாம் கட்ட பேச்சுக்களில் இருந்து வெளிநடப்புச் செய்வது என்று முடிவெடுத்தன.

எனினும் வெளிநடப்பு முடிவு புதியது ஒன்று அல்ல.

சென்னையில் இருந்து திம்புவுக்கு தமிழர் அமைப்புக்கள் போகும் முன்னர் டாக்டர் பாலசிங்கம் ஒரு அறிவிப்பை விடுத்தார்.

ஈழம் தேசிய விடுதலை முன்னணியின் 'விடுதலைச் சாசனத்'தை இலங்கை அரசு எதிர்த்தால், திம்புப் பேச்சுக்களில் இருந்து முன்னணி வெளிநடப்புச் செய்யும் என்பதுதான் அந்த அறிவிப்பு.

பேச்சுக்கள் ஆரம்பமானவுடன் தமிழர் அமைப்புக்களுக்கு தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் வகிக்கும் தகுதியுள்ளதா? என்று மட்டந்தட்டுமாப் போல் இலங்கை நடக்கத் தொடங்கியது.

'தமிழர் தாயகம்' பற்றி இலங்கை அரசுத் தூதுக்குழு கிண்டலாகவும் எரிந்து விழுவது போன்றும் கூறிய வார்த்தைகள் தமிழர் அமைப்புக்களின் ஆத்திரத்தைக் கிளறின.

'நீங்கள் வருவதற்கு முன்னரே இலங்கையில பௌத்த நாகரிகம் இருந்தது' - என்று இலங்கை அரசுக் குழு உறுப்பினர்கள் பேச்சுக்களின்போது தமிழர் அமைப்புக்களைப் பார்த்துக் கூறினர்.

இந்தச் சொற்பிரயோகம் இலங்கை அரசுக்குழு 'சின்னத்தனமான மேதாவித்தனத்தைக் காட்டும் விளையாட்டை' விளையாடுகின்றது என்ற உணர்வை தமிழர் பிரதிநிதிகள் மத்தியில் ஏற்படுத்தியது.

இக்கட்டத்தில் தான் வவுனியா, திருகோணமலைப் பகுதிகளில் நூற்றுக்கணக்கில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர் என்ற செய்தி வெளியானது.

எல்லாத் தமிழர் அமைப்புக்களும் இணைந்தன. வெளிநடப்பு முடிவை எடுத்தன.

இந்த நிலையில்தான், மூக்கில் பிளாஸ்திரி போட்ட நிலையில் இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரி திம்புவுக்குப் பறந்து வந்தார்.

விதி விபத்து ஒன்றில் பட்ட காயத்துக்குத்தான் பண்டாரி மூக்கில்பிளாஸ்திரி போடப்பட்டு இருந்தது

வந்தவுடன் தமிழ் அமைப்புக்கள் மீது பாய்ந்து விழுந்தார்.

சர்வசாதாரணமாக பண்டாரி வாயில் இருந்து Bloody, hell ஆங்கிலச் சொற்கள் வெளிவந்தன.

தமிழர் அமைப்புக்களில் அங்கம் வகித்த, இளம் போராளிகள் 'ஆதரவு தருபவரின் தூற்றுதலை'க் கேட்டு அமைதியாக இருந்தனர்.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் 'புதுமுகமா'ன திரு. நடேசன் சத்தியேந்திராவை திரு. பண்டாரி முன்னர் சந்தித்ததே இல்லை.

ஈழம் தேசிய விடுதலை முன்னணி வட்டாரங்களிலும் திரு. சத்தியேந்திரா ஒரு புதுமுகம்தான்.

திரு. பண்டாரியின் ஆத்திரங் கொண்ட தூற்றுதல்கள் திரு. சத்தியேந்திராவின் பொறுமையைச் சோதித்தது.

திரு. சத்தியேந்திரா பண்டாரியைப் பார்த்துச் சொன்னார்:

உங்கள் முட்டாள் தனமான பேச்சை நிறுத்தும். உங்களிடம் இருந்து பாடம் படிக்க நாங்கள் இங்கு வரவில்லை.

பண்டாரி மன்னிப்புக் கேட்க வேண்டும். தமிழ் அமைப்புக்களைப் பார்த்துச் சொன்ன Bloody என்ற சொல்லை வாபஸ் வாங்க வேண்டும் – இப்படி திரு. பண்டாரியை திரு. சத்தியேந்திரா வற்புறுத்தினார்.

திரு. சத்தியேந்திரா மேலும் சொன்னதாவது; 'ஒரு தேசிய இனத்தின் பிரதிநிதிகளாகத் தான் நாம் திம்பு மாநாட்டில் கலந்து கொள்கின்றோம்.

இதை திரு. பண்டாரி உணர்ந்துகொள்ள வேண்டும். ஆகவே ஆகக் குறைந்த அளவு ராஜதந்திர அந்தஸ்து. மரியாதையைத்தான் நாம் எதிர்பார்க்கின்றோம்

பேச்சுக்களைத் தொடருவதற்கு இது அல்ல வழி-'' இப்படி திரு. சத்தியேந்திரா சொன்னது, திரு பண்டாரியை மாநாட்டு மண்டபத்தில் இருந்து வெளியேறத் தூண்டியது.

அச்சமயம் திரு. பண்டாரி இப்பொழுது எனக்கு பாடம் படிப்பிக்கப் போகின்றீர்கள் போல் தெரிகின்றது — என்று சொன்னார்.

(நாளை தொடரும்)

இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இந்தியாவின் சிறப்புப் பிரதிநிதியாகப் பணியாற்றுபவர் திரு. ரொமேஷ் பண்டாரி.

திரு. பண்டாரி, இந்திய வெளியுறவுச் செயலாளர் பதவியில் இருந்து மார்ச் மாதத்துடன் ஓய்வு பெறப் போகிறார்.

அவருக்குப் பின்னர் யார் என்பது இன்னும் தெரியவில்லை.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில், பிரச்சினைக்குரியவராக தமிழ் ஈழ விடுதலை அமைப்புக்களால் கருதப்படுபவர் திரு. ரொமேஷ் பண்டாரி.

திம்புப் பேச்சுக்கள் முறிவடையாமல் இருக்க திரு. பண்டாரி, விடுதலை அமைப்புக்களை 'மிரட்டிப்'பார்த்தும் பலனளிக்கவில்லை.

அச்சமயம் இடம்பெற்ற மோதல் விவரங்களின் முதல்பகுதி இன்று பிரசுரமாகின்றது.

வித்தாரம்

என்ன முரளையாமர! நேற்றைக்கு எப்பிடிப் புதுவருஷம்? நீர் கோயில் குளத்துக்குப் போனது உண்டோ?

இங்கிலீஷ்வருஷம்பிறக்கிறதை ஒட்டி முந்தி எல்லாம், கிறிஸ்தவ ஆக்கள்தான் 'நியு இயர் மாஸ்'ஸுக்கு எண்டு சேர்ச்சுக்குப் போறவை.

இப்ப எங்கடை சைவ ஆக்களும் இங்கிலீஷ் புதுவருஷத்துக்கு கோயிலுக்குப்போய்க் கும்பிட்டும், அருச்சனை வைச்சுக் கொண்டும் வருகினம்.

நேற்று மத்தியானம் வரைக்கும் ஊர்களிலை உள்ள கோயில்களிலை ஒரே சனம். கிட்ட நெருங்கேலாது.

அதுகும் நல்லதுதான். இங்கிலீஷ் வருஷத்தைத் தானே அதிகம் பாவிக்கிறம். கலியாண வீடு, வீடு குடிபுகுதல், அது இது எண்டு ஏதாவது நல்ல காரியம் எண்டதும் தானே தமிழ் வருஷத்தைப் பாக்கிறோம். அதிகமாய் பாவிப்பிலை உள்ள வருஷத்தைக் கொண்டாடுறது தப்பு எண்டு நான் சொல்ல வரயில்லை. பிறகு அதைக் கொண்டாடிக் கொண்டு தமிழ் வருஷத்தை முழுக்க முழுக்கக் கைவிடாமல் இருந்தால் சரிதான்.

எங்கடை தமிழருக்குத் தங்கடை சொந்த கலை, கலாசாரம், பண்பாடுகளை விட வேறுநாட்டான்களிலைதான் கூட விருப்பம். விருப்பம் என்ன மோகம் எண்டு சொல்லலாம்' அதை விட்டுத்தள்ளு.

நேற்றைக்கு புதுவருஷ விசேஷம் எல்லோரையும் விட எங்கடை சிறிமா அம்மையாருக்குத்தான் கூட. பெரிய ''லக்கோடை'' அவவுக்குப் புதுவருஷம் பிறந்திருக்கு.

கடந்த ஆறு வருஷம் இரண்டு மாதங்களுமாய் அவவின்ரை காலிலை போட்டிருந்த கட்டை, ஜே. ஆர். நேற்று அவிட்டு விட்டிட்டார். அதுதான்ரா அப்பா அவவுக்கு திரும்பவும் குடியுரிமை குடுத்தாச்சு. அவ இனி அரசியலிலை முழுசாக் கலந்துகொள்ளலாம்.

அவ என்ன, செத்துப்போன பீலிக்ஸுக்கும், டாக்குத்தர் ஜலால்தீனுக்கும், நிஹால் ஜயவிக்கிரமாவுக்கும் மீண்டும் குடியுரிமை வழங்கியாச்சு.

அதிலையும் ஒரு தந்திரம் உந்த ஜே. ஆருக்கு! சிறிமாவுக்கெண்டு தனிய இல்லாமல் எல்லாருக்கும் மன்னிப்பு வழங்கினமாதிரி இருக்கட்டும் எண்டுதான் மேல்லோகத்திலை இருக்கிற பீலிக்ஸுக்கும் மன்னிப்புக் குடுத்திருக்கிறார்.

சோழியன் குடுமி சும்மா ஆடாதப்பா! அல்லாட்டா சட்டப்படி குடியுரிமை திரும்ப வாறதுக்கு இன்னும் பத்தே பத்து மாதங்கள் இருக்கயிக்கைதான் பெரிய ஐயாவுக்கு இரக்கமும் ஞானமும் பிறந்துதோ!

புதுவருஷத்திலை அவர் முதல்செய்த உத்தியோக வேலை நாலு பேருக்கும் மன்னிப்பு வழங்கிற பத்திரத்திலை கையெழுத்துப் போட்டதுதானும். கேட்டியே சங்கதியை.

இறால் போட்டுச் சுறு பிடிக்கிறதிலை மிகப் பெரியவர் நல்ல கெட்டிக்காரர். அதாலைதானே நாற்பது வருஷமா, எப்பிடியோ ஒருவிதமாச் சரிக்கட்டி அரசியல்வாதியாய் இருந்து, அதிஉத்தம ஜனாதிபதியாயும் வந்திட்டார்.

நேரம் போகுது உவற்றை உன் விஷயத்தை நாளைக்குச்சொல்லுறேன் ... என்ன!

கொண்டோடி

பொய்யாமொழி

குறள்:

அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை

பொருள்:

பல்லக்கைச் சுமப்பவனும் அதன்மேல் இருந்து ஊர்ந்து செல்லுவோனுமாகிய அவர்களிடையே அறத்தின் பயன் இஃது என்று கூறவேண்டா.

★ ஈழம் கோரிக்கை கைவிடப்படாதவரை

தமிழர் அமைப்புக்களுடன் இணங்கிப்போக இ. தொ. கா. தயாரில்லை!

மதுரையில் தொண்டமான்

சென்னை ஜன 1 தமிழ் ஈழம் கோரிக்கையைக் கைவிடாதவரை தமிழ் விடுதலை அமைப்புக்களுடன் இணங்கிப்போக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தயாராக இல்லை.

இ. தொ. கா. தலைவரும் கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் செய்தியாளர்களிடம் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

போராளிகளும் பாதுகாப்புப் படையினரும் வன்செயல்களில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கும் வரை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது.

இரு தரப்பினரும் 'விட்டுக் கொடுத்து' தீர்வு காணத் தயாராகும் வரை, தீர்வு பற்றிப் பேச்சுக்களை நடத்துவதால் எவ்வித பிரயோசனமும் இல்லை.

எமது அணுகு முறை தூய்மையானது என்று ஜனாதிபதி ஜெயவர்த்தனவை உணரச் செய்வோமேயானால், ஜெயவர்த்தனவை எமது வழிக்குக் கொண்டு வரச் செய்ய முடியும்.

தமிழ்ப் போராளிகளுக்கும் பாதுகாப்புப் படைக்கும் இடையே யுத்த நிறுத்தம் பற்றியும் மீறல் பற்றியும் பேசப்படுகின்றது.

உலகில் எங்கேயாவது யுத்த நிறுத்தம் சரிவரப் பேணப்படுகின்றதா? இல்லையே.

இந்தியாவில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் இலங்கை திரும்புவதற்கும்,

இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளியினர் இந்தியா திரும்புவதற்கும் தொடர்பு ஏற்பட்டுள்ள அபாயகரமான நிலைமை பற்றி இந்தியப் பிரதமருடன் பேச இருக்கின்றேன்.

சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் வராத 4 லட்சம் இந்தியத் தமிழருக்கும் இலங்கை அரசு குடியுரிமை வழங்க வேண்டும்.

உடனடியாக இது செய்யப்பட வேண்டும் என்று இ. தொ. கா. இலங்கை அரசை வலியுறுத்த உள்ளது —

இப்படி திரு. தொண்டமான், மதுரையில் வைத்து செய்தியாளர் மத்தியில் கூறினார்

திருடர் பிடிபட்டு எச்சரிக்கை

காங்கேசன்துறை, ஜன 2

தெல்லிப்பழை கிழக்குப் பகுதியில் சமீபத்தில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்களின் சூத்திரதாரிகள், இளைஞர் கோஷ்டி ஒன்றினால் பிடிக்கப்பட்டுக் கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

இவ்வாறான திருட்டுகள் தொடர்ந்து இடம்பெறுமல் இருக்க இளைஞர் கோஷ்டி கண்காணித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அகதிகளுக்கு உடு புடைவை பார்சல்

மானிப்பாய், ஜன. 2 இணுவில், உடுவில், கந்தரோடை சுன்னாகம் ஆகிய பகுதிகளில் உள்ள திருமலை, வவுனியா அகதிகளுக்கு உடுபுடைவைகள் வழங்கப்பட்டன.

வலிகாமம் தெற்கு உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் சுமார் 50 குடும்பங்கள் உடுபுடைவைப் பார்சல்களைப் பெற்றன.

சென்.ஜோன்ஸ் ஸ்தாபனத்தினரால் இவை அன்பளிப்புச் செய்யப்பட்டன.

நேற்று 30 அகதிகள் யாழ் வருகை

நல்லூர், ஜன. 2

திருமலையைச் சேர்ந்த பன்குளத்தில் ஏழு குடும்பங்களைச்சேர்ந்தமுப்பது பேர் நேற்று தமிழ் மகளிர் அவை மகாமிற்கு வந்து சேர்ந்தனர்.

இவர்கள் பன்குளம் அகதிகள் முகாமில் தங்கியிருந்து பின்னர் கொழும்பு சென்று அங்கிருந்து இங்கு வந்தனர் என்று கூறப்படுகிறது.

இவர்களுள் ஏழு பெண்களும் அடங்குவர்.

பண்டத்தரிப்பு மின்தறி ஊழியர் போராட்டம்

மறியல் நடத்த முன்அறிவிப்பு

பண்டத்தரிப்பு. ஜன.2 பண்டத்தரிப்பு மின்தறி ஆலை ஊழியர்கள் தமக்கு வழங்கப்பட்ட வேலை நீக்க உத்தரவை எதிர்த்து மறியல் போராட்டம் ஒன்றை நடத்த நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

4 ஆம் திகதி இப் போராட்டம் நடைபெறும்.

தமது மறியல் போராட்டம் பற்றி பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நிருவாகம், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு ஆகியவற்றுக்கு இவர்கள் முன்னறிவித்தல் கொடுத்துள்ளனர்.

சுமார் 35 ஊழியர்கள் நடுத்தெருவில் ந்நிற்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்தவேலையில் இருந்ததால் உணவு முத்திரையையும் இழந்தோம். இனி என்ன செய்வது என்று வர்த்தக ஊழியர் சங்க [illegible] திரு. க. சுப்பிரமணியம் கூறினார்.

காணி, வீடு வாங்கி விற்கும்
சேவை
காணிகளை வாங்கவோ, விற்கவோ
தொடர்புகொள்ள வேண்டிய
முகவரி:
சமுத்திரா மலரி சேவிஸ்
303, பலாலி ரோட்,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

உதயன்
02-01-1986

திருமணச் சேவை
பெற்றோர்களே!
வெகுவிரைவில் மணமகன், மணமகளை
தெரிவுசெய்ய
உடன் தொடர்புகொள்க:
சமுத்திரா மலரி சேவிஸ்
303, பலாலி ரோட்,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

வட்டக்கச்சிப் பகுதியில் ஜே. பி. உட்பட பலர் கைது

லொறியிலும் வானிலும் வந்து துப்பாக்கிச் சூடு

— கிளிநொச்சி மாவட்டச் செய்தியாளர் —

கிளிநொச்சி, ஜன. 2

வட்டக்கச்சியில் ஆயுதப்படையினர் நான்காவது நாளாக மேற்கொண்ட தேடுதலில் சமாதான நீதவான் (ஜே. பி.) உட்படப்பலர் கைது செய்யப்பட்டனர். சிலர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகினர்.

சம்பவம்பற்றித் தெரிய வருவதாவது:

செவ்வாய்க் கிழமை மாலை கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து லொறி ஒன்றில் சென்ற இராணுவத்தினர் வட்டக்கச்சி சுட்சன் வீதி, ஆறுமுகம் வீதி, செல்வா வீதி, சிபிச்சென்ரர் ஆகிய இடங்களைச் சுற்றி வளைத்தனர்.

இரண்டு பெரிய குண்டுகளை வெடிக்கவைத்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு அவர்கள் தேடுதல் நடத்தியசமயம் வீதியில் வந்த சில இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். ஒரு ஜே. பியும் கைதானார்.

பல சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் லொறியில் ஏற்றப்பட்டு முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டனர். அப்போது இராணுவத்தினர் சைக்கிள்களிலும், மோட்டார்சைக்கிள்களிலும் லொறியின் பின்னால் ஊர்வலம்போல் வந்தனர்.

இச்சம்பவத்தின்போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான வட்டக்கச்சி சிபிச் சென்ரர் என்னும் இடத்தைச் சேர்ந்த ஆறுமுகம் வசீகரன் கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்பு யாழ். பெரியாஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

இதேசமயம் செவ்வாய்மாலை கிளிநொச்சி கனகபுரம் பகுதிக்கு மோட்டார்கார் ஒன்றில் சென்ற இராணுவத்தினர் வீதியில் நின்ற இளைஞன் ஒருவனைக் கைது செய்தனர்.

அவ்விடத்தில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் வீட்டில் வேலை செய்துகொண்டிருந்த அப்பாவிப்பெண்ணை மார்க்கண்டு ஞானமலர் (24 வயது) துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார். பின்பு அவர் கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பொத்துவில் கடல்வரை கண்காணிப்பு வலயத்தை விஸ்தரிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 2

கடல் கண்காணிப்பு வலயத்தை பொத்துவில் கடல்வரை விஸ்தரிக்கும்படி ஜனாதிபதிக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அம்பாறையில் உள்ள மூன்று பௌத்த விகாரை பீடாதிபதிகள் இவ் வேண்டுகோளைக் கூட்டாக விடுத்துள்ளனர்.

வடபகுதிக் கடல் பகுதியில் நடைமுறைப் படுத்தப்படும் கண்காணிப்பு வலயம் பொத்துவில் கடல்வரை விரிவுபடுத்தப்பட வேண்டும்.

அதன்மூலம் பயங்கரவாதத்தை முறியடிக்க வேண்டும். அதற்கு எமது பூரண ஆதரவு அரசுக்கு உண்டு.

இப்படி அந்த வேண்டுகோளில் கூறப்பட்டுள்ளது.

அரச சார்பு தொழிற் சங்கம் பங்குபற்றாது

கொழும்பு, ஜன. 2

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தைப்பொங்கல் தினத்தில் இருந்து நடத்தவுள்ள பிரார்த்தனை இயக்கத்தில் அரச ஆதரவான லங்கா ஜாதிக தோட்டத் தொழிலாளர் சங்கம் கலந்து கொள்ளாது.

சங்கச் செயலாளர் திரு. ராஜா செனவிரத்ன இதனைத் தெரிவித்தார்.

தனது சங்கத்திலும் 3 லட்சம் தோட்டத் தொழிலாளர் அங்கம் வகிப்பதாக திரு. செனவிரத்ன சொன்னார்.

நாடற்றவருக்கு குடியுரிமை வழங்கப் படவேண்டும் என்பதை எமது சங்கம் எதிர்க்காது என்று திரு. செனவிரத்ன மேலும் சொன்னார்.

பயங்கரவாதத்தை இங்கு பரப்பாதீர்

தொண்டமானுக்கு காமினி எச்சரிக்கை

நுவரெலியா, ஜன. 1

வடக்கு, கிழக்குப் பகுதிகளின் பயங்கர நிலையை மலையகத் தோட்டப் பகுதிகளுக்கு பரவச் செய்ய உதவ வேண்டாம். அமைச்சர் காமினி திஸநாயக, அமைச்சர் தொண்டமானுக்கு மேற்கண்ட எச்சரிக்கையை விடுத்தார்.

168 ஆவது மகாஜன சம்பத விழாவில் பேசுகையிலேயே அமைச்சர் திஸநாயக இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

வடக்கு, கிழக்கில் இடம் பெறுவதை மலையகத்தில் இடம்பெற நாம் அனுமதிக்க மாட்டோம்.

இனவெறி, நாட்டுக்கு நல்லது அல்ல.

வெளியில் இருந்து வந்தவர்களே 1983 ஜூலையில் நுவரெலியாவில் கடைகளை, வீடுகளை எரித்தனர்.

மீண்டும் ஒரு கலவரம் ஏற்பட்டால், தமிழர்களை பாதுகாக்க நான் ஒரு 'சிங்கம்' போல் செயல்படுவேன். பிரச்சினைகள் நிலவும் சமயம் படுத்து இருந்து விட்டு, பிரச்சினைகள் முடிந்த பின்னர் வெளியே வரும் ஆள் நான் இல்லை. இப்படி அமைச்சர் திரு திஸநாயகா சொன்னார்.

இலங்கை அரசி...

(1 ஆம் பக்க தொடர்ச்சி)

எனவே குடியுரிமை மீண்டும் எனக்கு வழங்கப் படமாட்டாது என்று ஜனாதிபதி ஜெயவர்த்தன பலமேடைகளில் சொல்லி வந்தார்.

இப்போது மட்டும் நான் திருந்திவிட்டேன் என்று எண்ணியா அவர் குடியுரிமையை எனக்குத் தந்துள்ளார்?

இப்படி திருமதி பண்டாரநாயக்கா கேட்டார்.

ரூ. 1 லட்சம் வரையான

வைப்புப் பணத்திற்கு காப்புறுதி தேவை

மார்ச்சில் இருந்து திட்டம் அமுல்

யாழ்ப்பாணம், ஜன. 2

வர்த்தக வங்கிகளில் நிரந்தர வைப்பில் இடப்படும் பணத்துக்கும் காப்புறுதி செய்யப் படவேண்டும் என்று மத்திய வங்கி கேட்டுள்ளது.

வங்கிகள் திவாலானால் சிறு முதலீட்டாளர்களைக் காப்பாற்றும் நோக்குடன்தான் இந்தக் காப்புறுதித் திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளதாக மத்திய வங்கி ஆளுநர் திரு வர்ணசேன ராசபுத்ரம் சொன்னார்.

1 லட்சம் ரூபா வரையிலான வைப்புப்பணத்திற்குத்தான் இந்த காப்புறுதித்திட்டம்.

மார்ச் மாதத்தில் இருந்து இது நடைமுறைக்கு வருகின்றது.

வங்கியே பிரிமியத்தைச் செலுத்தும். வைப்பாளர் செலுத்தத் தேவை இல்லை.

100 ரூபாவுக்கு 4 சத வீதம் பிரிமியத்தை வங்கி செலுத்தும்.

(மற்றும் ஒரு செய்தி 2 ஆம் பக்கத்தில்)

சண்முகநாதனுக்கு அனுதாபம்

யாழ்ப்பாணம், ஜன. 2

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் திரு. இ. க. சண்முகநாதனின் மறைவுக்கு கல்லூரி அபிவிருத்திச் சங்கம் அனுதாபம் தெரிவித்து உள்ளது.

இது சம்பந்தமான அனுதாபத் தீர்மானம் அண்மையில் நடந்த குழுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

மினிவான் சைக்கிள் மோதல்

நல்லூர், ஜன. 2

மினிவான் ஒன்று சைக்கிளுடன் மோதியது.

யாழ். தட்டாதெருச் சந்தியில் நேற்று இச்சம்பவம் நடந்தது.

சைக்கிளில் சென்ற த. கந்தசாமி என்பவர் தலையில் காயத்துடன் யாழ். வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவரை மோதிய மினிவானைப் பொதுமக்கள் சிலமணிநேரம் வீதியில் தடுத்து வைத்திருந்தனர்.

காயம் அடைந்தவர் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் கடமையாற்றும் சிற்றூழியர் எனத் தெரியவருகிறது.

இனப்பிரச்சினை: நாடாளுமன்றம் செல்லாக் காசாகி விட்டது

பேராசிரியர் சிவத்தம்பி கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜன. 2

தற்போதய இனப் பிரச்சினைப் பேச்சுவார்த்தையில் நாடாளுமன்றம் செல்லாக்காசாகி விட்டது. தீர்வு வேறிடத்தில் காணப்பட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

அமரர் ஹான்டி பேரின்பநாயகம் இரண்டாம் நினைவுச் சொற்பொழிவு செவ்வாய் காலை யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடந்தது.

பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆங்கிலத்தில் உரை நிகழ்த்தினார். அப்பொழுதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஓய்வுபெற்ற திரு. எஸ். சுப்பிரமணியம் வைபவத்துக்குத் தலைமை வகித்தார்.

பேராசிரியர் சிவத்தம்பி தொடர்ந்து கூறியதாவது :— தமிழர்களின் போராட்டம் தமிழர்களுக்கு மட்டுமல்லாது சிங்களவர்களின் சிந்தனை செயற்பாடுகளில் அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. எனவே தனி மரங்களைப் பார்த்து முடிவுகளை எடுக்காது அப்பால் உள்ள வனத்தை அறிய முயல வேண்டும்.

இப்போராட்டத்துக்கு சமூக அரசியல் கோணங்கள் உள. பலரும் அரசியல் கோணத்தை மட்டுமேநோக்குகின்றார்கள். சமூக கண்ணோட்டத்தை மறந்து விடுகின்றார்கள்.

தமிழர்கள் ஒரு தனித் தேசிய இனம், தமிழர் பாரம்பரிய பிரதேசத்தின் ஒருமைப்பாடு, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, தோட்டத் தொழிலாளரின் குடியுரிமை ஆகியவை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாடு ஏற்பட்டுள்ளது.

போராட்டம் யுத்த சூழ்நிலையில் நடைபெறுகிறது.

மரபு ரீதியான நாடாளுமன்றத்திலேயே பிரச்சினைகள் ஆராயப்பட்டு, தீர்வுகள் காணப்படுவது உண்டு.

ஆனால் இங்கு நாடாளுமன்றம் செல்லாக்காசாகி விட்டது தீர்வு வேறிடத்தில் காணப்பட வேண்டிய நிலை உருவாகி உள்ளது

இதன் காரணமாக இந்தியாவின் சம்பந்தமும் ஏற்பட்டுள்ளது. இந்தியா இன்று இப்பிரச்சினையில் ஒரு பாரிய சக்தி என [illegible]

இப்படி அவர் கூறினார்.

இந்தியா இடை...

(1 ஆம் பக்க தொடர்ச்சி)

வலியுறுத்தினர்.

இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரி மீண்டும் இலங்கை செல்வாரா என்று அவரிடம் கேட்கப்பட்ட போது அவசியம் ஏற்பட்டால் மட்டும் அது பற்றி பரிசீலனை செய்யப்படும் என்று அவர் பதில் அளித்தார்.

(1 ஆம் பக்க தொடர்ச்சி)

சிறிமாவோ....

டணி சமர்ப்பித்த மாற்று யோசனைகளைச் சாதகமான முறையில் பரிசீலனை செய்வதற்கும் சுதந்திரக்கட்சி முட்டுக்கட்டைபோடுகின்றது.

குடியுரிமையை வழங்கி விட்டால் சுதந்திரக் கட்சியை இந்தியப் பிரதமருடன் பேசவைத்து, அரசின் முயற்சிகளுக்கு இணங்க வைக்கலாம் என்று அரசாங்க வட்டாரங்களில் கருத்து நிலவுகின்றதாம்.

அதன் பிரதிபலிப்பே, 7 ஆண்டுகால குடியுரிமைத் தடை நீங்குவதற்கு பத்து மாதங்கள் மட்டுமே இருக்கையில் அவசரம் அவசரமாக திருமதி பண்டாரநாயக்காவுக்கு குடியுரிமை வழங்கப்பட்டது என்று அரசியல் வட்டாரங்கள் விமாசிக்கின்றன.

விளையாட்டரங்கு

புத்தூர் வளர்மதி சாம்பியன்

சுன்னாகம் றேயல் விளையாட்டுக் கழக சுற்றுப் போட்டியில்

சுன்னாகம், ஜன. 2

சுன்னாகம் றேயல் விளையாட்டுக் கழக பத்தாண்டு நிறைவு விழாவை யொட்டி நடத்தப்பட்ட கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் புத்தூர் வளர்மதி கழகம் சாம்பியனானது.

இறுதி ஆட்டத்தில் சுன்னாகம் வளர்பிறை விளையாட்டுக் கழக அணியை புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணி பலத்த போட்டியின் முடிவில் தோற்கடித்தது.

இதன் மூலம் வளர்மதி விளையாட்டுக் கழக அணி திரு. நா. சிவசுப்பிரமணியம் ஞாபகார்த்த சுற்றுக் கேடயத்தை சுவீகரித்துக் கொண்டது.

இருபதிற்கு மேற்பட்ட விளையாட்டுக் கழகங்கள் இந்தச் சுற்றுப் போட்டியில் பங்கு கொண்டன என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இறுதியாட்டம் சுன்னாகம் சந்தை மைதானத்தில் நடைபெற்றது. பெருந்திரளான ரசிகர்கள் இந்த ஆட்டத்தைக் கண்டு களித்தனர்.

இறுதி ஆட்டத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை வழங்கினார்.

வலிகாமம் தெற்கு விளையாட்டுக் கழகத் தலைவர் திரு. க. பொ. நடனசிகாமணி நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார்.

திரு. ஐ. திருச்செந்தூரான் இறுதியாட்டத்தற்கு மத்தியஸ்தம் வகித்தார்.

நொக்கவுட் போட்டி இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம் ஜன. 2

கோண்டாவில் வோக்கேஸ் மைதானத்தில் நடைபெறும் இன்றைய உதைபந்தாட்டத்தில் யாழ்ப்பாணம் முஸ்லிம் விளையாட்டுக் கழக (மருன்) அணியும், நாவாந்துறை சென். மேரிஸ் அணியும் நேரடி மோதலில் இறங்குகின்றன.

திருநெல்வேலி பாரதி சனசமூக நிலையத்தின் ஒலிம்பிக் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் கொண்ட நொக்கவுட் போட்டியின் ஓர் அங்கமாகவே இப்போட்டி நடைபெறுகிறது இப்போட்டியில் 36 அணிகள் பங்குபற்றுவது குறிப்பிடத்தக்கது.

இறுதியாட்டங்களை தைப்பொங்கல் தினத்தன்று நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருப்பதாக ஒலிம்பிக் விளையாட்டுக்கழக செயலர் தெரிவித்தார்.

இன்றைய போட்டி மாலை 4-30 மணிக்கு ஆரம்பமாகும்.

இன்று சிட்னியில் மூன்றாவது டெஸ்ட்

சிட்னி, ஜன. 1

ஆஸ்திரேலிய இந்திய அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் இன்று ஆஸ்திரேலியாவில் சிட்னி நகரில் ஆரம்பமாகிறது.

அடிலயிட்டில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் ஆட்டமும் மெல்போர்னில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் ஆட்டமும் வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தது தெரிந்ததே,

இன்று ஆரம்பமாகும் டெஸ்ட் ஆட்டத்தின் நேர்முக வர்ணனையை ஆகாசவாணி ஆங்கிலத்தில் ஒலிபரப்புகிறது.

இதனை 450.5 மீட்டர் அலைவரிசையில் இலங்கை நேரப்படி காலை 5.30 மணி முதல் 7.30 மணி வரை, 8 10 மணி முதல் 10.10 மணி வரை, 10 30 மணி முதல் 12.30 மணி வரை கேட்கலாம்.

குடியுரிமை---

(1-ம் பக்கதொடர்ச்சி)

பட்டதாக ஜனாதிபதி விசேட ஆணைக்குழு செய்த சிபார்சைத் தொடர்ந்து குடியுரிமை நீக்கப் பிரேரணை நாடாளு மன்றத்திற்கு கொண்டுவரப் பட்டு நிறைவேற்றப்பட்டது.

இப்பொழுது அரசமைப்புச் சட்டத்தின் 34 ஆவது பிரிவின் கீழ் மீண்டும் குடியுரிமை வழங்கப் பட்டது.

1986 ஆம் ஆண்டில் ஜனாதிபதி ஜெயவர்த்தன கைச்சாத்திட்ட முதலாவது பிரகடனம், குடியுரிமையை மீண்டும் வழங்கும் ஆவணம் என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கு, கிழக்கு பொலீஸ் கட்டாய சேவைத் திட்டத்தில் ஊழல்

கொழும்பு, ஜன. 1

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைமுறைப் படுத்தப்படும் பொலீஸாரின் கட்டாய சேவைத் திட்டத்தில் ஊழல்கள் இருப்பதாகக் கூறப்படுவது குறித்து பொலீஸ் மா அதிபர் திரு. சிறில் ஹேரத் முழு விசாரணை நடத்த தீர்மானித்து உள்ளார்.

கட்டாய சேவைத் திட்டத்தின் கீழ் 6 மாத காலத்துக்கு பொலீஸ் சேவையில் உள்ளோர் அனைவரும் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் சேவையாற்ற வேண்டும்.

இத்திட்டத்தில் ஊழல்கள் இடம்பெறின் அது பற்றி பொலீஸார் தன்னிடம் நேரடியாக முறையிடலாம் என்று பொலீஸ் மா அதிபர் அறிவித்துள்ளார்.

ஹேலீஸ் வால்நட்சத்திரம் வருகை

1986 இல் உலகத் தலைவர்கள் பலருக்கு கேடு விளைவிக்கும்.

நியூயோர்க், ஜன. 1

'ஹேலீஸ் வால்நட்சத்திரத்தின் வருகை, அதனோடு இணைந்து வரும் சூரிய சந்திர கிரகணங்கள் 1986 இல் பல உலகத் தலைவர்களுக்குக் கேடு விளைவிக்கும்' இப்படி அமெரிக்காவின் பிரபல ஜோதிடர்கள் ஆரூடம் வெளியிட்டுள்ளனர்.

பெரும்பாலான ஜோதிடர்களின் கருத்துப்படி, பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கரட் தட்சர் பதவியில் இருந்து நிர்ப்பந்தம் காரணமாக விலக வேண்டி நேரிடுமாம்.

அவரின் நெருங்கிய நம்பிக்கைக்குரிய அரசியல் கூட்டாளியே அவரைக் கைவிட்டு விடுவாராம்.

அமெரிக்க அதிபர் றேகனுக்கும் பல அரசியல் நெருக்கடிகள் தோன்றுமாம். றேகனின் மனைவி நான்ஸிக்கு உடல் நலக் குறைவு ஏற்படுமாம்.

றேகனுடன் கருத்து வேற்றுமை ஏற்பட்டு, வெளிநாட்டமைச்சர் ஜோர்ஜ் சூல்ட்ஸ் ராஜினாமாச் செய்வாராம.

இப்படி எல்லாம் ஆரூடங்கள் கூறப்பட்டுள்ளன.

த சென்ஷேஷனல் வீக்லி வோல்ட் நியூஸ் பத்திரிகையின்படி, அதிபர் றேகன் மூன்றாவது முறையும் ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடுவார் என்று கூறியுள்ளது.

அமெரிக்க அரசமைப்புச் சட்டத்தின்படி ஜனாதிபதி பதவியை இரண்டு தடவைகளுக்கு மேல் ஒருவர் வகிக்கமுடியாது.

ஆனால் அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தி மூன்றாவது முறையும் ஜனாதிபதி பதவியை வகிக்க திரு. றேகன் முயற்சி செய்யலாம் என்றும் அப்பத்திரிகை ஆரூடம் கூறியுள்ளது.

ஆமி வாறான்...

(1 ஆம் பக்க தொடர்ச்சி)

எடுக்கச் சென்றேன்.

அப்போது தனியார் மினிவான் ஒன்று வந்து கொண்டிருந்தது.

வீதியில் நின்றவர்கள் 'ஆமி வாறான்', 'ஆமி வாறான்' என்று கத்திக் கொண்டு ஓடினார்கள்.

நானும் பயத்தினால் தோட்ட வெளியினூடாக ஓடினேன். அப்போது மினிவானில் வந்தவர்கள் சுடத் தொடங்கினார்கள்.

எனக்கு முழங்காலில் காயம் ஏற்பட்டது. தொடர்ந்து ஓடமுடியவில்லை. துரத்தி வந்த மூன்று சீருடையினர் என்னைக் கைது செய்து தங்களுடன் கிளிநொச்சி முகாமிற்கு அழைத்துச் சென்றனர்.

அங்கு சிகிச்சை அளிக்கப்பட்ட பின்னர் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் கொண்டுவந்து சேர்த்தனர்

மீண்டும் என்னை அவர்கள் தங்கள் முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

பின்பு மறுபடியும் ஆஸ்பத்திரியில் என்னைச் சேர்த்தனர்.

அதன் பின்பு கிளிநொச்சி ஆஸ்பத்திரி அம்புலன்ஸ் மூலம் யாழ் ஆஸ்பத்திரிக்கு வந்தேன்.

இப்படி அவர் தெரிவித்தார்.

இலங்கையில்
முதல் ஓடியோ கிளப்
பாடல் பதித்த மக்சல் கசற்றுகள்
வாடகைக்கு
ஒரு நாளுக்கு ரூபா 2-50
பலரின் வேண்டுகோளுக்கிணங்க
இன்னும்
சில தினங்களுக்கு
பாடல் பதித்த மக்சல் கசற்
மலிவு விலையில் - ரூ. 29-50
(பழைய விலை 35 ரூபா)
நியூ விக்ரேஸ்
ஓடியோ கிளப்
23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 23532

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்,
வெளியிட்ட திகதி 02-01-1986.